# 1200 மீனவர் படம் பிடிக்கப்பட்டனர்

Registered as a Newspaper in Ceylon ** விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 10
போன் 389 இதழ் 65
National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக சித்திரை 4 முஹறம் 17 செவ்வாய்க்கிழமை (16-4-68)

## அடையாள அட்டைகள் வழங்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதி மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவிருக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை வடமராட்சிப்பகுதியில் சுமார் 1200 மீனவர்கள் படம் பிடிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்க புகைப்பட பிரிவினர் இப் படங்களை இலவசமாக எடுத்துவருகின்றனர்.

இத் திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப்பகுதியில் உள்ளமீனவர்கள்இம்மாதம் 19-ம்20-ம் 21-ம்திகதிகளில் புகைப்படம் எடுக்கப்படுவார்கள். வடபகுதியில் மொத்தம் 10,000 மீனவர்கள் அடையாள அட்டை பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மீனவர்களுக்கான இந்த அடையாள அட்டைத் திட்டம் எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து வடபகுதியில் அமுலுக்கு வரவிருக்கின்றது. (கா. நி)

### அமெரிக்காவின்

# 'மிதக்கும் வைத்தியசாலை' கொழும்பு சேர்ந்தது

## சிகிச்சையளிப்பது வியாழன் ஆரம்பமாகும்

### கப்பலிலுள்ள தளபாடங்கள், இலங்கைக்கு கிடைக்கும்

கொழும்பு, திங்கள்

அமெரிக்க மிதக்கும் வைத்தியசாலையான 'ஹோப்'கப்பல் இன்று கொழும்புத்துறைமுகம் வந்து சேர்ந்தது. பிரதமர் திரு. டட்லிசேனநாயகா, சுகாதார மந்திரி திரு. ஈ. எல். சேனநாயகா, அமெரிக்க தூதுவர் திரு. கொரி ஆகியோர் கப்பலையும் கப்பலில் வந்தவர்களையும் வரவேற்றனர்.

'ஹோப்' கப்பலில் இலங்கை நோயாளருக்கு சிகிச்சையளிப்பது வியாழக்கிழமை ஆரம்பமாகும்.

இக்கப்பல் இலங்கையில் தனது கடமைகளை முடித்துக்கொண்டு திரும்புகையில் அதிலுள்ள வைத்திய உபகரணங்களையும் மீதியிருக்கும் மருந்து வகைகளையும் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கிச் செல்லும் என்று சுகாதார மந்திரி திரு. ஈ. எல். சேனநாயகா தெரிவித்தார். இக்கப்பலில் உள்ள ஒரு யந்திரம் சுமார் 2500 பசுக்களிலிருந்து கிடைக்கக்கூடிய பால் சத்துக்களைத் தயாரித்துக் கொடுக்கக்கூடியதாம். அதற்கு 'இரும்புபசு' என்று பெயர்.

பிரதம மந்திரிதிரு. டட்லி சேனநாயகா கப்பலை வரவேற்றுப் பேசுகையில் இக்கப்பலில் வந்துள்ள டாக்டர்களும், மற்றவர்களும் நம் நாட்டில் ஆரோக்கிய வளம் ஓங்குவதற்கும் உதவுவார்கள், அதன் மூலம் நாட்டின் பொருள்வளத்துக்கும் வழிசெய்வார்கள் என்று கூறினார். புத்தபெருமான் ஆரோக்கியமேபெரிய செல்வம் என்று கூறியிருப்பதாக பிரதம மந்திரி நினைவு கூர்ந்தார். இக்கப்பல் இங்கு சிகிச்சைகள் அளிப்பதன்

(6-ம் பக்கம் பார்க்க)

### ஜூலை மாதத்துக்கு முன்

## சிங்களத் தேர்ச்சி பெறாத பழைய அரசாங்க ஊழியர்

### அரசாங்க சேவைக் கமிஷன் விரைவில் முடிவு செய்யும்

கொழும்பு, திங்கள்

சிங்களத்தில் தேர்ச்சி பெறாத பழைய அரசாங்க ஊழியர் (1956-ம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள்) சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை அரசாங்க சேவைக்கமிஷன் விரைவில் தீர்மானிக்கும்.

1956-ம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்கு அரசாங்கம் கொடுத்திருந்த காலக்கெடு இவ்வருடம் ஜூலை மாதத்துடன் முடிவடைகிறது.

சிங்களத்தில் தேர்ச்சி பெற்றுள்ள பழைய அரசாங்க ஊழியரின் தொகை அதிகரித்து வருகின்றபோதிலும் இன்னும் சிலர் சிங்களத் தேர்ச்சி பெறாமலுள்ளனர் என்றும் இவர்களது சம்பள உயர்வு, பதவி உயர்வு ஆகியன பற்றியும் இவர்களை சேவையில் தொடர்ந்து வைத்திருப்பது பற்றியும் இவர்கள் சம்பந்தமாக அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றியும் அரசாங்க சேவை கமிஷன் முடிவு செய்யுமென்றும் உத்தியோக மொழிக் கமிஷனர் தெரிவித்தார்.

# மதுவிலக்கு: ராஜாஜி கருத்து

புதுடில்லி, ஏப்ரல் 15

'மதுவிற்பனவை ஒரு வருமானமாகக் கருதுவது தவறு ஏழைமக்கள்பலர் மதுபானத்தால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மதுவிலக்கு சட்டத்தை கொண்டுவந்த அரசினரும் அதை அமுல் நடத்தாமல் விற்பனைவரியை ஒரு வருமானமாகக்கருதி நடந்து வருகின்றனர். இது விரும்பத்தக்கதல்ல'.

இவ்வாறு திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

மதுவிலக்கு நாட்டின்முன்னேற்றத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாட்டுமக்களுக்குப் புரியவைப்பது சுகாதார அமைச்சினதும், கல்வி அமைச்சினதும் கடமை எனக் கூறிய திரு. ராஜகோபாலாச்சாரியார், குறிப்பிட்ட அமைச்சு அதற்கான பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டுமென்றார்.

---

## திரு. அழகேசன்

புதுடில்லி, ஏப்ரல் 15

முன்னாள்மந்திரி திரு. அழகேசன் எதியோப்பியாவுக்கு இந்திய ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

[எதிர்வரும் ஆகஸ்ப் மாதம் 3-ந் திகதி நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரியர்பரீட்சைக்கான 'பொது அறிவும் உள்ளூர் அறிவும்' மாதிரி வினா விடைகளை 4-ம், 5-ம் பக்கத்தில் பார்க்க]

# அண்ணா அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்றார்

## பிரமுகர்கள் பலர் வழியனுப்பி வைத்தனர்

சென்னை, ஏப்ரல் 15

தமிழக முதல்மந்திரி திரு. சி. என் அண்ணாதுரை அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லும் மார்க்கத்தில் இன்று பம்பாய் சென்றடைந்தார்

அவரை சென்னை விமான நிலையத்தில் தமிழக கவர்னர் மற்றும் அமைச்சர்கள் உட்பட பிரமுகர்கள்பலரும் வழியனுப்பி வைத்தார்கள்.

புறப்படுவதற்குமுன் திரு. அண்ணாதுரை நிருபர்களிடம் பேசுகையில், பாரதத்தின் ஐக்கியப்பாட்டின் அம்சங்களை எடுத்து விளக்கப் போவதாகவும், காங்கிரஸ் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கைக்கும் தி.மு.க. வின் வெளிநாட்டுக் கொள்கைக்கும் ஒற்றுமை இருப்பதாகவும் அவர் கூறினார்.

திரு அண்ணாதுரை வெளிநாடுகளில் இருக்கும்போது அவருடைய பணிகளை தமிழகமந்திரிகளில்திரு. நெடுஞ்செழியன், கருணாநிதி, மாதவன் ஆகியவர்கள் உட்பட நான்கு மந்திரிகள் பகிர்ந்து செய்வார்கள்.

அவர் வெளிநாடு செல்வதையொட்டி விசேஷ பூசையொன்று இன்று நடத்தப்பட்டது.

தமது வெளிநாட்டுப் பிரயாணத்தின்போது கடந்த 20 வருடங்களில் காங்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இறைவனை நினைந்து கொண்டே எந்த வேலையைச் செய்தாலும், சிரமம் தோன்றாது. வேலை செய்வதே ஒரு விளையாட்டுப்போல் இருக்கும். 'நான்' என்ற அகம்பாவம் இராது. வாழ்க்கையே இன்பமாகும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் இலக வருஷம் சித்திரை மாதம் 4ம் திகதி [16-4-68]

## சிமெந்தில் மோசடியா?

பதுக்கலையும் கொள்ளை லாபத்தையும் ஒழித்துக் கட்டுவதற்கு இடையிடையே துடித்தெழும் நமது உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் சிமெந்து விஷயத்தில் நடைபெறும் பதுக்கல், கொள்ளை லாபத்தைப் பற்றி பராமுகமாக இருப்பது ஏன் என்பதுதான் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

சிமெந்துக்கு இப்போது நாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. நாட்டின் ஒரே ஒரு சிமெந்து உற்பத்தி ஆலையான காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சிமெந்து நாட்டின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாது. ஆயினும் ஓரளவாவது நமது தேவையை அது பூர்த்திசெய்து வந்தது. அங்குள்ள சூளை தீப்பிடித்ததுடன் வேறு சில இயந்திரக்கோளாறு காரணமாகவும் சிமெந்து உற்பத்தி தடைப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தியாகும் சிமெந்தில் பெரும் பகுதியை அரசாங்கம் தனது தேவைகளுக்காக எடுத்துக்கொள்கிறது. மஸ்கெலிய ஓயாத்திட்டத்துக்காகவும் அரசாங்கம் சிமெந்தை பெருமளவில் கொள்வனவு செய்து கொள்கிறதாம். அரசாங்கம் தனது பெரிய திட்டங்களைச் செயல்படுத்த திட்டமிடும் பொழுது நாட்டின் சிமெந்துத்தேவையையும் தனது திட்டங்களுக்கு வேண்டிய சிமெந்தையும் கணக்கிட்டு, அதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டியது அவசியம். சரியான திட்டம் இல்லாமல் அரசாங்கம் எதையும் செயல்படுத்த முனைவதால்தான் ஒன்று பலவாகி பிரச்னைகள் அதிகரிக்கின்றன. சிமெந்து உற்பத்தி ஆலை யாழ்ப்பாண மாவட்டத்திலிருப்பினும் இங்கு சிமெந்து நியாயமான விலைக்குப் பெறுக்கொள்ளமுடியாமலிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் சிமெந்தும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருவதாக இல்லை.

சிமெந்துக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படவில்லை. தொழிற்சாலை விலை இப்பொழுது ஒரு பாக்கட் சிமெந்துக்குப் பத்து ரூபாய். முன்னர் இது ஒன்பது ரூபாயாக இருந்தது. கூட்டுறவுச் சங்கச் சமாஜங்கள் இந்த விலைக்குச் சிமெந்தை வாங்கிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பத்து ரூபாய் ஐம்பது சதமாக விற்கின்றன. அதாவது தொழிற்சாலை விலையைவிட ஐம்பது சதம் தான் அதிகம். ஆனால் பல நோக்குக் கூட்டுறவுச் சமாஜங்களுக்கு உரிய நேரத்தில் சிமெந்து கொடுக்கப்படுவதில்லை. சமாஜங்கள் கேட்கும் தொகையும் வழங்கப்படுவதில்லை. முன்னர் கொடுக்கப்பட்ட 'கோட்டா' இப்பொழுது குறைக்கப்பட்டுவிட்டது. தனிப்பட்ட வர்த்தகர்களிடம் சிமெந்து தாராளமாக இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு இல்லை. இருந்தும் ஒரு பாக்கெட் சிமெந்தை பதினெட்டு ரூபாயிலிருந்து இருபத்தைந்து ரூபாய் வரை தனிப்பட்ட வர்த்தகர்கள் விற்பனைசெய்கிறார்கள். பொதுமக்களுக்கு நியாயமான விலையில் சிமெந்து வழங்கும் கூட்டுறவுச் சமாஜங்களுக்குச் சிமெந்து தாராளமாகக் கிடைக்க முடியாமலிருக்க அதிக விலைக்குச் சிமெந்தை விற்பனை செய்யும் சிலதனிப்பட்டவர்த்தகர்களுக்கு மட்டும் சிமெந்து தாராளமாகக் கிடைப்பதற்குக் காரணமென்ன? இதில் ஊழலும் மோசடியும் இடம்பெறவில்லையென்று சொல்ல முடியுமா?

வீட்டுத்தட்டுப்பாட்டை நீக்குவதற்காக வீடு கட்டுவதற்காக அரசாங்கமும், வங்கிகளும் கடன் கொடுத்து வருகின்றன. வீடு கட்டுவதற்கு அவசியத் தேவையான சிமெந்து நியாயமான விலையில், தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கு வழிவகை செய்யாமல் கடன் கொடுத்து என்ன பயன்; வீடமைப்புத் திட்டங்களுக்கு ஊக்கமளித்துத்தான் என்ன பயன்? சிமெந்துத் தட்டுப்பாட்டினால் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். அவர்களின் குடும்பங்கள் பட்டினி கிடக்க நேருகின்றன. கட்டிடத் தொழிலிலீடுபட்டுள்ள தொழிலாளர் பலரும் நிவாரண உதவி கோரும் நிலையிலுள்ளனர்.

சிமெந்தில் பதுக்கல், கொள்ளை லாபம், ஊழல், மோசடி ஆகியவைகளை ஒழித்துக்கட்டவும், கட்டிடத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் [1] சிமெந்துக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். [2] பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜங்கள், சங்கங்கள் மூலம் சிமெந்து விநியோகிக்க ஒழுங்கு செய்யவேண்டும்; [3] அரசாங்கம் தனது திட்டங்களுக்குத் தேவையான சிமெந்தைக் கொள்வனவு செய்கையில் தனியார் தேவையையும் கருத்தில் கொள்ளவேண்டும்; [4] சிமெந்துக்குப் பர்மிட் வழங்குவதில் சில உறுதியான கட்டுப்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டியதும் அவசியம்?

# "ஏகோபித்த முடிவு வரும்வரை காத்திருக்கவேண்டும்"

## ஆலயப்பிரவேசம் பற்றி மாவிட்டபுரம் குருக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ். ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக இந்துமாமன்றக்குழுவினர் நிறைவேற்றிய தீர்மானம் பற்றி மாவிட்டபுரம் கந்தசாமிகோவில் பிரதம குருக்கள் ஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

மாவிட்டபுரத்தில் ஜூலை முதற்கிழமையில் பஜனைக் கோஷ்டியுடன் ஆலயப் பிரவேசம் நடக்குமென்று நேற்றைய ஈழநாடு பத்திரிகையில் படித்தேன். இதைப் படித்ததும் அன்பர்கள் எனது வீட்டில் குழுமி பலத்த எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அரசாங்க அதிபர் கூட்டிய மாநாட்டில் நான் கேட்டுக்கொண்டதற்கும் இன்று இந்துமாமன்றம் எடுக்கும் முயற்சிக்கும் நேர்மாறாக இருக்கிறது. பொலிசார் சட்ட நடவடிக்கை பற்றி மாநாடு கூட்டி அறிவித்தார்கள். அதுபோல் இந்து மாமன்றமும் கூட்டம்கூடி பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிந்து அதன் பின்னரே எவ்வித நடவடிக்கையும் எடுக்கவேண்டும். இதைவிடுத்து தாம் தீர்மானித்துவிட்டு நடவடிக்கையில் உடனே இறங்கினால் பின்னர் ஆலயத்தில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பொறுப்பது யார்? பொதுமக்கள் விரும்பாத செயலினைப் புகுத்துவது அநீதி. பூசகர், உபயகாரர், பணிவிடைசெய்வோர் வழிபடுவோர் ஆகியவர்களே ஓர் ஆலயத்தை முறைப்படி நடாத்தவும், இறை அருள் எங்ஙனும் பரப்பவும் உண்மை நெறி நிற்பவர்கள். இவர்கள் கருத்துவேறுபாடாக இருக்க ஆலயப்பிரவேசம் செய்தால், இவர்கள் ஊக்கமும், முயற்சியும், ஒத்துழைப்பும் தர பின்நிற்பார்கள். அதன் பின் கோவில் முன்னேற்றமும், சேவையும் எப்படியாகும் என்பதை இந்துமாமன்றம் உணரவேண்டும்.

வன்முறையாகச் செய்யப்படும் எக்காரியமும் நீண்ட காலப் பிரச்னையாகவே இருக்கும்.

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவிலில் கடமைசெய்யும் அந்தணர்கள், உபயகாரர், பணிவிடை செய்வோர், வழிபடுவோர் விருப்பப்படியே ஆலயப்பிரவேசப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும். அவர்கள் ஏகோபித்த முடிவுக்கு வரும்வரை அரசாங்கமும் இந்து மாமன்றமும் காத்திருக்கவேண்டும்.

ஆகவே பழுத்த அனுபவத்தையும் பொறுப்புணர்ச்சியையும் முன்வைத்து நான் ஆலயப்பிரவேச இயக்கத்தினர் எல்லோரையும் கேட்டுக்கொள்வது வேதசிவாகமங்களுக்கு விரோதமில்லாமலும் சைவமக்களின் சுபிட்சத்திற்கும் உழைக்க வேண்டும் என்பதுதான்.

## இன்றைய பலன்

சித்திரை மீ 4உ
[16-4-68]
செவ்வாய்க்கிழமை

திதி- சதுர்த்தி இரவு 1-27 மேல் பஞ்சமி.

நட்சத்திரம்- அனுஷம் மாலை 5-08 மேல் கேட்டை.

ராகுகாலம்- 3-04—4-34.

சுபநேரம்- 10-34—12-04.

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு செய்தொழில் விருத்தியும், வாகனமுடையோர் பாதையில் கவனமும் பாவையர்மனதில் பரசவமூட்டும் சம்பவம் நிகழலும் இயந்திரத்தொழில் புரிவோர் மந்தநிலையும், வணிகத்துறையில் சம விருத்தியும், உண்டு கல்விநிலையில் கவனம் செலுத்தில் இவ்வாண்டு நல்லாண்டாகும்.

மேஷம்- அன்னிய வாசம் அசலபோசனம்
ரிஷபம்- காதல் கரும்பு சுவைத்திட விரும்பு.
மிதுனம்- ஆயுதபீடை, அவசரம் வேண்டாம்.
கடகம்- தந்தைவழி நாட்டம் தனமும்சேரும்.
சிம்மம்- முயற்சியால் உயற்சிதனமும் சேரும்.
கன்னி- பொருள் வரவு புதினம் கேட்டல்.
துலாம்- சிந்தனைப் புதிர், சிறிவரும்கோபம்.
விருச்சிகம்- குடும்பக் கலவை, குறுக்குவழி தலையீடு.
தனுசு- வாக்குச் சித்தி, வரவிலும் திருப்தி.
மகரம்- இரும்பு மனம், இருண்ட வாழ்வு.
கும்பம்- தாய்வழிச் சுகம், தனவரவு.
மீனம் அறவழி நாட்டம், தாராளமனம்.

— சோதிடகலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## இறைவழிபாடு அவசியம்

உடுவில், திங்கள்

"அரிய மானிடப்பிறவியை எடுத்துள்ள நாம் அதன் பயனை அடையும் பொருட்டு ஆலயங்கட்குச் சென்று இறைவழிபாடு செய்தல் அவசியம். சமயகுரவர்கள் காட்டியபாதையில் ஒழுகி ஒரு நிறைந்த பேரின்பத்தைப் பெறுவோம்."

கொக்குவில் சனசமூகநிலையத்தினர் கொண்டாடிய புத்தாண்டு விழாவில்பேசிய திரு. சி. முத்துத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

சனசமூக நிலையத் தலைவர் திரு. க. த. இராசாவின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விசேஷ பூசையும், இன்னிசைக் கச்சேரிகளும் இடம்பெற்றன.

ஆலயவழிபாடு ஒருசமய கோட்பாடு என்றும் பெற்றோர் தம்பிள்ளைகளுக்கு பக்திப்பாடல்களையும் சமய அறிவையும் ஊட்டவேண்டும் என்றும் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

உபதலைவர் திரு. பே. கனகரத்தினம் புத்தாண்டு கவிதை பாடினார். செயலாளர் திரு. ந. சிவராசா நன்றி கூறினார்.

## நூரளையில்.........

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

தமது சொந்த பங்களாவில் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் ஓய்வெடுத்து வருகின்றனர். இம்மாதம் 17 ம் திகதி திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் பிறந்த தினம்.

[5-ம் கலத்தொடர்ச்சி]

'என்ன மடம்! டி.சி.பில் எப்படியிருக்கு?'

'அனே செல்வா! தங்கள் சித்தம் என் பாக்கியம்!

பின்பு மேற்கூறிய எல்லோரும் ஒன்று கூடி 'ஹாய், ஹாய், பபி ஆச்சிலே பைச்சிகின் எக்க' என்று 'பைலா' பாடி ஆடுகிறார்கள்.

—வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்று சேர்ந்துவிட்டால் இலங்கையில்பரிபூரணமான பொருளாதார சுதந்திரம் ஏற்பட்டுவிடும் என்று பிக்கிரியா சோமாலோக நாயக தேரோ சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

சுவாமிகள் அவர்கள் கூறியது எமக்கு புதிதாகத் தோன்றவில்லை. பல காலமாக எம்போன்ற பத்திரிகையாளர்களும் அரசியலோடு சம்பந்தமில்லாத வெறும் சாதாரண மானிடர்களும் இப்பேர்ப்பட்ட ஒரு கற்பனையைக்கட்டித்தழுவி கனவு கண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கனவு எப்பொழுது நனவாகும் என்று ஏங்கித் தவிக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசாங்கத்தில் ஏற்கனவே தமிழரசு, தமிழ் காங்கிரஸ், எம்.ஈ.பி.என்று ஏழு கட்சிகள் சேர்ந்துள்ளன.

சிறி அம்மாவோ கட்சியிலும் சமசமாஜக்கட்சியும் ரஷ்ய கொம்யூனிஸ்ட் கட்சியும் கலந்திருக்கின்றன.

இவை இரண்டும் ஒன்று கூடிவிட்டால் பிறகு கேட்க வேண்டுமா?

ஆமா, ஒரு கேள்வி எழுகிறது. எதிர்க்கட்சி யார்? இவை இரண்டிலும் சேராமலிருக்கும் பீகிங் கொம்யூனிஸ்ட் கட்சியா? அல்லது இங்கு ஒரு காலும் அங்கு ஒரு காலும் வைத்துக்கொண்டு தாண்டவம்செய்யும் ஆர். ஜி. சேனநாயகாவா? ஆனால் பாவம், ஆர். ஜி.க்கு கட்சி கிடையாது. அவர் ஒரு தனிக் கட்சி.

யு. என். பி.யும் சுதந்திரக் கட்சியும் ஒன்று சேர்ந்துவிட்டால் நாடாளுமன்றத்தில் அவர்களுடைய பலம் நூற்றுக்கு கிட்டத்தட்ட தொண்ணூறு விகிதமாகிவிடும். இப்படி ஒரு 'ராமராஜ்யம்' எப்பொழுதாவது ஏற்படுமா?

கற்பனை கூட்டும் இப்படி ஓர் ஐக்கியம் உண்டாகும் காலையில் யார் யார் மந்திரி சபையில் இருப்பார்கள்?

பிரதமர் டட்லி என்று வைத்துக்கொள்வோம். உதவிப் பிரதமர் சிறி அம்மாவோ. நிதிமந்திரி என்.எம். காணி விவசாயம் பிலிப். கூட்டுறவு மின்சாரம் இ. பி. டி. தொழில் பீட்டர். நீதிமந்திரி எஸ். ஜே. வி. கைத்தொழில் கடற்றொழில் ஜீ. ஜீ. உள்நாட்டு மந்திரி தஹா. வர்த்தகம் ஜே. ஆர் உள்ளூர் ஆட்சி திரு. போக்குவரத்து மராமத்து சிவசிதம்பரம். கல்வி கலாச்சாரம் 'படி' [பதியுதீன் முகம்மது].

ஃ ஃ

பிரதிநிதிகள் சபை சிற்றுண்டிச்சாலையில் ஒரு நாள் காலை.

ஹலோ, மச்சான், பொன்னு. மொக்கதை மே மங்கலக் கழகத்தைப்பற்றி கரைசல் அப்பா.'

'நொ. நொ டட்லி. கரைச்சல் நதிங். செல்வா சொன்னால் நானும் ஓம் தான்!'

வேறொரு மேஜையில் இன்னொரு சம்பாஷணை.

'ஹலோ கொம்றேட் பிலிப், என்ன இந்தத் துறைமுகத் தொழிலாளர் ஸ்ரைக்?'

'அதெல்லாம் நிக்காங் பீற்றர். என். எம். என்ன சொன்னாலும் எனக்கும் 'ஓகே' தான்!'

இன்னொரு மேஜையில் செல்வாவும் சிறி அம்மாவோவும் ஐஸ்கிறீம் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்னும்

# பூர்வாங்க பேச்சுக்கள் நடத்த அமெரிக்கா தாமதம்

## ஹனோயின் புகாரை அமெரிக்கா மறுத்தது

வாஷிங்டன், ஏப்ரல் 15 அமெரிக்க-வட வியட்னும் பிரதிநிதிகளுக்கிடையேயான வியட்னும் சமாதான பூர்வாங்க ஆலோசனைகள் நடக்கவேண்டிய இடம் பற்றி வட வியட்னுமிடமிருந்து ஒரு முடிவான பதிலைத் தாம எதிர்பார்த்திருப்பதாக வாஷிங்டனிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஜக்கார்த்தா, வியன்ஷியென், புதுடில்லி, ஜெனிவா, ரங்கூன் ஆகிய தலைநகர்கள் தமக்கிசைவாக இருக்கும் என்று அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த ஐந்து தலைநகர்களில் எதையாவது தெரிவுசெய்ய வட வியட்னும் விரும்பாவிடில், டோக்கியோ அல்லது கொழும்பில் பேச்சு வார்த்தைகளை வைத்துக் கொள்ளலாமெனவும் அமெரிக்கா ஆலோசனை தெரிவித்துள்ளது.

பேச்சு வார்த்தைகளுக்கு வட வியட்னும் ஆலோசனை தெரிவித்துள்ள இடங்களை நிராகரிப்பதன் மூலம் அமெரிக்கா வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை வேண்டுமென்றே தாமதப் செய்துவருவதாக ஹனோய் சுமத்தும் குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்துள்ளது.

நான் ஜனதிபதியானல்

## வியட்னுமிலிருந்து அமெரிக்க துருப்புகளைவாபஸ்பெறுவேன்

—றெபேப் கென்னடி

தாம் அமெரிக்காவின் அடுத்த ஜனதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் வியட்னுமிலிருந்து அமெரிக்கத் துருப்புகளைத் உடனடியாக வாபஸ்பெற்றுவிடப்போவதாக செனேட்டர் றெபேட் கென்னடி, நேற்று இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

துருப்புகளைத் திருப்பி அழைப்பதன் மூலம் நாட்டுக்கு மீதமாகும் நிதியை, உள்நாட்டுத் தேவைகளுக்குத் தாம் பயன்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினர்.

தென் வியட்னுமுக்கு அமெரிக்கா உதவியளிக்கத் தயங்காதென்றும், ஆனல் அவர்களுக்காக அமெரிக்கா போரில் வெற்றி பெற்றுக் கொடுக்க முடியாதெனவும் திரு. கென்னடி குறிப்பிட்டார்.

## ஹூவே நகர் அருகே கடும் சண்டை

### 660 வட வியட்னுமியர் கொல்லப்பட்டனர்

சைகோன், ஏப்ரல், 15 தென் வியட்னும் நகரான ஹூவேக்கருகே நடந்த கடும் சண்டையொன்றில், 660க்கும் மேற்பட்ட வட வியட்னுமியரைக் கொன்றுள்ளதாக அமெரிக்க தென் வியட்னும் துருப்புகள் அறிவிக்கின்றன.

இச்சண்டையில், அமெரிக்கர் பக்கம் 77 பேர் கொல்லப்பட்டதாகவும், தென் வியட்னுமியர் பக்கம் சொற்பமான இழப்பே ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

## மேற்கு பெர்லினில் மாணவ ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நீடிப்பு

பொன், ஏப்ரல் 15 மேற்கு பெர்லினில் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

இடதுசாரி மாணவத் தலைவர் ஒருவரைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சியைத் தொடர்ந்து, மேற்கு ஜெர்மனியிலுள்ள பல நகர்களிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்திருந்தன.

நேற்று, மேற்கு பெர்லினில் ஆர்ப்பாட்டம் செய்த 2,500 க்குமதிகமான மாணவர்கள், போக்குவரத்து அனைத்தையும் தடைசெய்தனர். மாணவர்களைக் கலைக்கப் பொலிசார் குண்டாந்தடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

### குற்றவாளி வாக்குமூலம்

கொலை முயற்சிக்கான மாணவர் தலைவர், சூட்டுக் காணங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகிருர்.

இவரைக் கொலை செய்ய முயன்றவன், பொலிசாருக்கு அளித்துள்ள வாக்குமூலமொன்றில், டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் அண்மையில் அமெரிக்காவில் கொலைசெய்யப்பட்டதே, தனது இந்தக் கொலை முயற்சிக்குத் தூண்டுகோலாக விளங்கியதாகக் கூறியுள்ளனர்.

## வடகொரிய தாக்குதல்

### நால்வர் பலி

சியோல், ஏப்ரல் 15 கொரியாவில், போர் ஓய்வுப் பிரதேசமான பான்-மொன்-ஜம் முக்குக்கருகே, தென் கொரிய இராணுவ லொறியொன்றை வட கொரியர் ஒளிந்து நின்று தாக்கியதன் விளைவாக, 2 அமெரிக்கர்களும், 2 தென் கொரியர்களும் கொல்லப்பட்டனர்.

உ. பி.

## பி. சோ. தலைவர் காங்கிரஸில் சேர்ந்தார்

லக்னே, ஏப்ரல் 15 உத்தரப்பிரதேசத்தில், பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தலைவரான திரு. திரிலோகி சிங், அக்கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துவிட்டு, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

## சென்னையில்முடிவுற்ற மதுவிலக்கு மாநாடு

### மத்திய, ராஜ்ய அரசுகளுக்கு கண்டனம்

சென்னை, ஏப்ரல் 15 சென்னையில் கூடி முடிவுற்ற அகில இந்திய மதுவிலக்கு மாநாடு, மதுவிலக்குக்கொள்கையை அமுல் செய்வதில் மத்திய, ராஜ்ய அரசாங்கங்களின் அக்கறையின்மையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மாநாட்டின் இறுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசிய சுதந்திரக்கட்சித் தலைவரான திரு. ராஜாஜி கலால் 'வருமானத்தை அடியோடு கைவிடுமாறு ராஜ்ய அரசுகளைக் கோரிக்கொண்டார். 'பாவம் பொருந்திய வருமானம் அது' என்ருர் அவர்.

மதுவிலக்குக் கொள்கையைப்பொலிசார் மூலம் அமுலாக்குவதை திரு. ஆச்சாரிய கிருபளானி எதிர்த்தார். மக்களைப் பொறுத்த இப்பிரச்னை, சமூக அடிப்படையிலேயான சீர்திருத்தம் மூலமே தீர்க்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தினர்.

பால்டிக் கடலில்

## கிழக்கு, மேற்கு ஜெர்மன் கப்பல்கள் மோதின

பொன், ஏப்ரல் 15 மேற்கு ஜெர்மனி டோப்பியோக் கப்பலொன்றும் கிழக்கு ஜெர்மனிக்கப்பலொன்றும் பால்டிக்கடலில் மோதிக்கொண்டுள்ளன.

கியூபாவிலிருந்துதிரும்பிக் கொண்டிருந்த தமது கப்பலைக் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன், வேண்டுமென்றே மேற்கு ஜெர்மன் டோப்பியோக்கப்பல்மோதியதாகக் கிழக்கு ஜெர்மனி குற்றஞ்சாட்டியுள்ளது.

கிழக்கு ஜெர்மன் கப்பலிலிருந்து கடலுக்குள் குதித்தவர்களை மீட்கச்சென்ற போதே மோதல் ஏற்பட்டதாக மேற்கு ஜெர்மனி அறிவித்துள்ளது.

## இஸ்ரேல் பிடித்துள்ள அரபுப் பிராந்தியங்கள் படைவிலக்குப் பிரதேசமாக்க

### டாக்டர் ஜாரிங் ஆலோசனை

அம்மான், ஏப்ரல் 15 மேற்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டுள்ள ஐ. நாவின் மேற்கு ஆசியப் பிரதிநிதியான டாக்டர் குனர் ஜாரிங், தமது தூதுகோஷ்டி விஜயத்தில் முதற் தடவையாக இப்போது ஓரளவு வெற்றியடையும் கட்டத்தில் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரபு-இஸ்ரேலியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இஸ்ரேல் பிடித்து வைத்துள்ள அரபுப் பிராந்தியங்களைப் படை விலக்குப் பிரதேசமாக்கிவிடலாம் என்று டாக்டர் குனர் ஜாரிங் ஆலோசனை தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

டாக்டர் ஜாரிங்கின் ஆலோசனைப்படி, இஸ்ரேலிடமுள்ள ஐக்கிய அரபுக் குடியரசு, ஜோர்தான், சிரியா போன்ற அரபு நாடுகளின் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் திருப்பி அழைக்கப்படுமென்றும், அதே நேரத்தில் அரபுத் துருப்புகள் எதுவும் இப்பிரதேசங்களினுள் நுழைய அனுமதிக்கப்படாவென்றும் தெரிகிறது.

இதற்கிடையில் நேற்று ஜோர்தான் ஆற்றுக்குக் குறுக்கே இஸ்ரேல் துருப்புகளும், ஜோர்தான் துருப்புகளும் பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளன.

இத்துப்பாக்கிச் சண்டையில் இஸ்ரேலியப் போர் வீரர் ஒருவர் கொலைசெய்யப்பட்டதாக டெல் அவிவ் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## 11 வருடமாக இருக்கும் அத்திவாரக் கல்

சாய்ந்தமருது, திங்கள் சாய்ந்தமருதில் சுமார் பதினெரு வருடங்களுக்கு முன் அப்போது சுகாதார அமைச்சராகவிருந்த திருமதி விமலா விஜயவர்த்தனவால் நாட்டப்பட்ட பிரசவ வார்ட்டுக்கான அடிக்கல் அப்படியே இப்போதும் இருந்துகொண்டிருக்கிறது.

மேற்படி வார்ட்டுக்காக ஒதுக்கப்பட்ட பணம் என்ன கதியிலிருக்கிறது என பொதுமக்கள் புரிந்து கொள்ளமுடியாத நிலையிலிருப்பதாகத் தெரிகிறது.

## உடுப்பிட்டி பெண்களுக்கு உபசபாநாயகர் பாராட்டு

உடுப்பிட்டி, திங்கள் "பல ஆண்டுகளுக்குப் பின்னர் நான் பிறந்து வளர்ந்து, என்னை உலகு மதிக்கச் செய்த எனது சொந்த ஊரில் அளிக்கப்படும் இப்பாராட்டுபசாரம் மேன்மேலும் எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றது. உயர் பதவிகள் நீர்க்குமிழிகள் போன்றவை. நாம் உயர்நிலைக்கு வரவும் முடியும், அதனை அழிக்கவும் முடியும். எந்தப் பெரிய விஷயத்திலும் பிழைகள் நேரிடுவது சகஜம். நாம் ஒருபோதும் பிழைகளைப் பெரிதுபடுத்தக்கூடாது".

இவ்வாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம் அவரது சொந்த ஊரான கரவெட்டியில் நடைபெற்ற புத்தாண்டு விழாவில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர். இவ்விழாவிற்கு ஆசிரியர் திரு. பொன்னையா தலைமை வகித்தார்.

உடுப்பிட்டித் தொகுதி வாலிப முன்னணியினரால் நடத்தப்பட்ட இவ்விழாவை முன்னிட்டு மாட்டு வண்டிச் சவாரி நடைபெற்ற கரவை வெல்லன் திடலிலிருந்து உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் விழா நடைபெறும் மத்தொனி முருகையன் ஆலய முன்றலுக்கு அலங்கரிக்கப்பட்ட உழவு இயந்திரமொன்றில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

உபசபாநாயகர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"இன்று விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சியினுல் யந்திரங்கள் பல தோன்றியுள்ளமையினுல் நாம் நடைகளை மறந்து விட்டோம. எமது வீடுகளில் ஆடு, மாடுகளை வளர்ப்பதின் மூலம் இவைசுபீகரம் அடையலாம். இதன் காரணமாகவே நான் ஆடு, மாடுகளைப் பெரிதும் விரும்புகின்றேன். மாட்டு வண்டிச் சவாரி தமிழினத்தின் பண்டைய ஒரு விளையாட்டு சவாரிப் போட்டி

[4ம் பக்கம் பார்க்க]

## கி. பாகிஸ்தானில் 200 பேர் மரணம்

டாக்கா, ஏப்ரல் 15 கிழக்குப் பாகிஸ்தானில் கடந்த வியாழக்கிழமையன்று வீசிய கடும் புயலில் இறந்தவர்களின் தொகை 500 ஆக உயர்ந்துள்ளது. 1,500 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர்.

இத்தகவல்களைக் கிழக்குப் பாகிஸ்தான் கவர்னர் நேற்று இங்கு வெளியிட்டார்.

## புதிய விண்கலம்

### ரஷ்யா மீண்டும் அனுப்பியது

மாஸ்கோ, ஏப்ரல் 15 ரஷ்ய, விஞ்ஞான உபகரணங்கள் பொருத்தப்பட்ட மற்றுமொரு விண்கலத்தை சந்திரமண்டலத்துக்குச் செலுத்தியுள்ளது.

1962-ம் ஆண்டு, மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட விண்கலத் தொடர்ச்சியில் இப்புதிய விண்கலமான 'கொஸ்மோஸ்-272' அனுப்பப்பட்டுள்ளது.

## பயாபராவை தன்சானியா அங்கீகரித்தது

லண்டன் ஏப்ரல் 14 நைஜீரியாவிலிருந்து பிரிந்துபோன கிழக்குப் பிராந்தியமான பயாபரா ஆட்சியை தன்சானியா அங்கீகரித்துள்ளது. இதனை ஆட்சேபிக்கும் வகையில் நைஜீரியா தன்சானியாவுடனன ராஜீயத் தொடர்புகளைத் துண்டித்துக்கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது தாயையும் தந்தையையும் வெட்டினாராம்

## மகனைப் பொலிஸ் தேடுகிறது

அளவெட்டி, திங்கள்

புதுவருடக் கொண்டாட்டச் செலவுக்குப் பணம் இல்லை எனக்கூறிய தந்தையையும் தாயையும் வெட்டிவிட்டுத் தலைமறைவாகத் திரிகிறாராம் தனயன்.

தையிட்டியைச் சேர்ந்த நவராசா என்பவரே தமது தந்தை வேலுப்பிள்ளையையும் தாய் இலட்சுமிப்பிள்ளையையும் இவ்வாறு வெட்டினாராம்.

படுகாயமிகளுக்குள்ளான கணவனும், மனைவியும் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதுசம்பந்தமாக காங்கேசன்துறை குற்றத்தடுப்புப்பகுதி இன்ஸ்பெக்டர் திரு. வி. வி செல்லையா புலன்விசாரணை செய்துவருகிறார்.

# உலக நாடுகளில் நாம் முன்னணியில் திகழ வழி

## செனட்டர் நடராசா கூறுகிறார்

அளவெட்டி, திங்கள்

புத்தாண்டிலே புதிய புதிய விளையாட்டுக்களை இடம்பெறச் செய்வது மாத்திரமல்லாது பண்டைய விளையாட்டுக்களைக் கைவாவிடு பாரம்பரியமான நமது கலைகளை வளர்க்க விளையாட்டு வீரர்கள் ஒன்றுசேர வேண்டும். இப்படிப்பட்ட நல்ல கொண்டாட்டங்களை கிராமங்களில் கிராமசேவையாளர்களும் பொலிசாரும் ஒன்றுசேர்ந்து நடத்தினால் கிராமங்களில் எழும் சீர்கேடான நிலை அற்றுப்போவதுடன் சீரான சமுதாயத்தை உருவாக்கலாம். ஓய்வு நேரங்களை நாம் வீணாக்காது விளையாட்டுத் துறையில் செலவழித்தால் உடல் நலம் அடைவதோடு உலக நாடுகளில் நாம் முன்னணியில் திகழலாம்.

இவ்வாறு செனட்டர் சு. நடராசா காங்கேசன்துறையில் நடைபெற்ற புத்தாண்டு விளையாட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

வலி வடக்கு விளையாட்டுக்கழக சமாசமும் காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியினரும் கிராமசேவையாளர்களும் ஒன்றுசேர்ந்து நடாத்திய இவ் விளையாட்டு விழாவில் இப்பகுதி சனசமூக நிலையங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் பல விளையாட்டுக் கழகங்களும் கலந்துகொண்டன.

காங்கேசன்துறை பட்டின சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ் விளையாட்டு விழாவில் காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. ஆர். சதாசிவம் தேசியக்கொடியையேற்றிவைத்தார்.

பத்தமேனி கிராம சேவையாளர் திரு ஏ. சி.ரி. கிருஷ்ணராசா வரவேற்று உரை நிகழ்த்தினார். திரு. ஆ. வ. சதாசிவம் தலைமைவகித்தார். திரு. எம். செல்வராசா நன்றி கூறினார்.

---

## உடுப்பிட்டி . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் மாடுகளை எவ்விதத்திலும் இம்சிக்காது அவற்றைப் போட்டியில் ஈடுபடுத்துமாறு போட்டியாளர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

உடுப்பிட்டி தொகுதியில் பெண்கள் விளையாட்டுத் துறையில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளனர். தமிழ்மக்களின் நல்வாழ்விற்காகநான் தொடர்ந்து உழைத்துவருவேன். உபசபாநாயகர் பதவிகிடைத்ததின் மூலம் நான்மாவட்டசபைக்கு ஆதரவாக வாக்களிப்பேன் என்று எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்வது பொய்யாகும். இப்பதவியை எந்தக் கட்டத்திலும் உதறித்தள்ள நான்தயாராயுள்ளேன்.

பருத்தித்துறைநகர பிதா திரு. என். நடராசா உட்பட வேறுசிலரும் பேசினர்.

போட்டிகளில்வெற்றியீட்டியவர்கட்கு உப சபாநாயகர் பரிசில்கள் வழங்கினார். திரு. எஸ். கந்தப்பு நன்றியுரை கூறினார்.

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

வினாக்கள்:

1. பாகிஸ்தான் ஜனாதிபதி யார்?
2. ஒல்லாந்தருக்குப் பின் இலங்கையை ஆண்டவர்கள் யார்?
3. இலங்கையின் கீழ்க்கரையிலுள்ள இயற்கைத் துறைமுகம் யாது?
4. சந்திரனுக்கு சுயஒளி உண்டா?
5. இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் யார்?
6. இலங்கையின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் யார்?
7. அகில இலங்கை புத்தகாங்கிரஸ் (ACBC) தலைவர் யார்?
8. டொன் பிரெட்மன் என்பவர் எத்துறையுடன் ஈடுபாடு கொண்டவர்?
9. இலங்கையின் சர்வதேச விமானநிலையம் எங்கமைந்துளது?
10. சுழல்துப்பாக்கியை [Revolver] கண்டுபிடித்தவர் யார்?
11. புத்தர் பிறந்த இடம் எது?
12. சாந்தி நிகேதத்தைத் தோற்றுவித்தவர் யார்?
13. அவுஸ்திரேலியாவில் இலங்கைத் தூதுவராகக் கடமை செய்பவர் யார்?
14. இலங்கை புதைபொருளாராய்ச்சி ஆணையாளர் யார்?
15. சர்வதேச அரிசி ஆய்வு நிலைய [IRRI] அதிபதி யார்?

(விடைகள் 5-ம் பக்கம்)

# திருநெல்வேலி இசைவிழா

## இன்றையநிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்.

திருநெல்வேலி இன்னிசை மன்றத்தின் ஆறுவது வருட இசைவிழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகள், இன்றுநடைபெறும். திருநெல்வேலிச் சந்தி இந்துவாலிபர் சங்க மண்டபத்தில் இன்றுமாலை 6 மணிக்கு நடைபெறும் இவ்விழாவிற்கு இளைப்பாறிய மாவட்ட நீதிபதிதிரு. சி. தம்பித்துரை தலைமைவகிப்பார்.

இன்றைய நிகழ்ச்சிகள் விபரம்.

இரவு 6.45 மணி: மாணவர்கள் வாய்ப்பாட்டு-7.00 மணி: திரு ரி குமாரசாமிப் புலவர் இசையின் தோற்றம் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார். 7.30மணி: பாட்டு செல்வி புவனாம்பிகை செல்லத்துரை 7.50மணி; பாட்டு செல்வி ஜெயகுமாரி சண்முகநாதன் 8.10 மணி: பாட்டு திருமதி குமாரதேவி கனகசிங்கம். 8.55 மணி பாட்டு திரு ஆ. நமசிவாயம். 9.55 மணி: பாட்டு திரு. தா. இராசலிங்கம் 10.55மணி: யாழ் வைத்தீஸ்வரன் கல்லூரி மாணவிகளின் நடனம்.

[கா. தி]

---

## சைவமகாநாடு

யாழ்ப்பாணம், செவ்.

அகில இலங்கைசைவமகாநாடுவருகிற புதன், வியாழன், வெள்ளிக்கிழமை ஆகியதினங்களில் யாழ்ப்பாணம்நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற விருக்கின்றது முதல்நாள்நிகழ்ச்சிகளுக்குதருமபுர ஆதின வித்துவான், சித்தாந்தப் புலவர்மாமணி பாலகவிவயிநாகரம் ஸ்ரீமதி வே. இராமநாதன் செட்டியார் [தத்புருஷ தேசிகர்] தலைமைதாங்குவார்.

---

## மணல்களவு

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் திருவடிநிலை கடற்கரைப் பகுதியில் மீண்டும் மணல் களவு நடைபெற்று வருகிறதாம். முன்னர் சிலகாலம் இக்களவு நின்றிருந்தபோதிலும் இப்போது வண்டிவண்டியாக மணல் கொள்ளை போகத் தொடங்கியுள்ளது. களவாடப்படும் இம்மணல் விற்கப்படுகிறதாம்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 16-4-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்புகள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் அல் 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர்கேட்டவை.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — டி. எம். [illegible]

# சின்னவெங்காய உத்தரவாத விலையை உயர்த்த கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உப உணவுப் பொருட்களில் ஒன்றாகும் சின்னவெங்காயத்தின் உத்தரவாத விலையை கணிசமான அளவுக்கு உயர்த்த வேண்டுமென அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் பிரதமமந்திரியையும் உணவு விவசாய அமைச்சரையும் தந்தி மூலம் வேண்டியுள்ளது.

கணிசமான அளவுக்கு இதன் உத்தரவாத விலையை உயர்த்தினால் இவ் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட ஏதுவாக இருக்கலாமென்றும், நாணயமதிப்புக் குறைக்கப்பட்ட காரணத்தால் உள்ளூர் பொருட்களுடன் ஏனைய உணவுப் பண்டங்களின் விலையும் அதிகரித்துள்ளதென்றும் ஏழை விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனைசெய்வதே உணவுப் பொருட்களை வாங்கவேண்டியிருப்பதனால் வெங்காய விலை ஏற்றத்தினால் பயனுண்டென்றும்இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெங்காயப்பயிர்செய்கை கடன்கால எல்லையை இரண்டு போகத்திற்கு ஒருமுறை கட்டக் கூடியகான வசதிகளையும் விவசாயிகளுக்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ள இம்மகஜரின் பிரதிகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கோப்பாய் உடுப்பிட்டி. பருத்தித்துறைத் தொகுதிகளுக்கும் மற்றும் எம். பி. களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

[கா. தி]

---

## 'புதிய உத்திகள் வேண்டும்'

அளவெட்டி, திங்கள்

"தமிழ் மக்களின் முதுசொத்து கலைகள். இக்கலைகளை வளர்க்க தமிழ்மன்னர்கள் கலைஞர்களுக்கு நாடுகளையும், திரவியங்களையும் வழங்கினார்கள்.

பண்டைய தமிழ்மக்களிடையே வளர்ந்திருந்த நாடகக்கலை 17, 18, 19-ம் நூற்றாண்டில் அந்நியரின் தலையீட்டால் சிதைவுற்றது. மக்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சியால் இப்போது இக்கலை முன்னேற ஏதுவாகியுள்ளது. மேலும் முன்னேறுவதற்கு நாடகக்கலையில் புதிய புதியஉத்திகள் கையாளப்படவேண்டும்" என நாடக ஆசிரியர் ஏ. ரி. பொன்னுத்துரை காங்கேசன்துறை இளந்தமிழர் மன்ற 10-வது ஆண்டு நிறைவு விழாவில் நாடகப் போட்டியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

## நாய்கடித்து பெண் மரணம்

யாழ்ப்பாணம். செவ்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் நாயொன்றினால் கடிக்கப்பட்டபெண் ஒருவர் சில தினங்களுக்குமுன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானார், மரணமான திரேசம்மா (35 வயது)வின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

மரணமானவருக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நாய் கடித்ததாகவும், அன்றே நாய் இறந்துவிட்டதால் மரணமானவருக்கு போதிய சிகிச்சை அளிக்கப்படவில்லையென்றும், சிலதினங்களுக்கு முன்னர் மரணமானவர் மூச்சுவிடவும் முடியாமல். சாப்பிடவும் முடியாமல் அவஸ்தைப்பட்டதாகவும் மரணமானவரின் கணவனான ராசேந்திரம் மரண விசாரணையின்போது தெரிவித்தார்,

டாக்டர் திருமதி பத்மாநந்தனும் சாட்சியமளித்த பின்னர் நாய் கடித்ததால் ஏற்பட்ட விபத்து மரணம் என்த்தீர்ப்பளிக்கப்பட்டது.

[கா. தி.]

## சிரமதானம்

நாவற்குழி, திங்கள்

நாவற்குழி மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கமும், நாவற்குழி சனசமூக நிலையமும் கூட்டாகச் சேர்ந்து நாவற்குழி மகாவித்தியாலயத்தின் புது விளையாட்டு மைதானத்தை சிரமதானம் மூலம் செப்பனிட்டனர். இப்பணிக்கு வித்தியாலய அதிபர் திரு. இ. சந்தையா தலைமை தாங்கினார். சிரமதான தொண்டர்களுக்கு பொது மக்கள் குளிர்பானம் வழங்கினர்.

---

## நீண்டகால குறை தீர்ந்தது

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடிப் பட்டினத்தைச் சேர்ந்த இளைஞர்களினதும் பொதுமக்களினதும் நீண்டகால குறை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பட்டினசபையால் நடாத்தப்பட்டுவரும் நெல்லியடிப் பட்டின மத்திய நூல்நிலையம் இதுவரைகாலமும் வாரத்தில் இருதினங்கள் மூடப்பட்டிருந்ததாலும் சேவைநேரம் போதாததாலும் பொதுமக்கள் விசேஷமாக மாணவர்களும், அரசாங்க ஊழியர்களும் மிகவும் கஷ்டமடைந்துவந்தனர். இதனைத் தொடர்ந்து நெல்லியடி வரியிறுப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. நா. சண்முகநாதன் [யாழ்வாணன்] உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு எல் முருகேசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இம்மாதம் முதல் இந்நூல் நிலையம் தினமும் காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரையும் இயங்கிவருகின்றது.

---

## இருமாடிக் கட்டிடம்

வவுனியா, திங்கள்

வவுனியாக் கூட்டுறவுச் சங்கம் வெகுவிரைவில் ஓர் இரண்டடுக்கு மாடிக் கட்டிடத்தை கட்டவிருக்கிறது. இக் கட்டிடம் பல வசதியான வசதிகளுடன் அமைக்கப்படும்.

---

## பயிர் செய்கை குழு உறுப்பினர்

கிளிநொச்சி, திங்கள்

அக்கராயன் குளம் வடபகுதி மத்திய வகுப்பு பயிர்ச்செய்கைக் குழுவின் நிர்வாக சபைக் கூட்டம் அக்கராயன் குளம் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் திரு. வை. மார்க்கண்டு தலைமையில் கூடியது. பயிர்ச்செய்கை அத்தியட்சகர் ஓவசியர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். காலியாகவிருந்த தலைவர் கமவிதானைப் பதவிகளுக்கு முறையே திரு. சி. அ. க. வானரசன், திரு. த. சுந்தரலிங்கம் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணன் கோஷ்டி

எமது பெயரில் சிலர் நடாத்தும் எவ்வித நிகழ்ச்சிகளுக்கும் நாம் பொறுப்பல்ல. என்றும் எமது சேவை ரசிகப்பெருமக்களுக்கு உண்டு. உங்கள் ஆதரவை நாடி நிற்கும்,

எம். கண்ணன்
[இசை நிர்வாக அதிபர்]
&
கோஷ்டியினர்

P. P. காந்தன்
[நிர்வாகி]
646, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பாட்டு
திருமதி சாந்தா
S.J. சௌந்தரராஜன்

வாத்திய இசை
M. கண்ணன், K. S. தேவன், R. T. ராஜன், S. M. சந்தானம், P. P. காந்தன், P. R. கிருஷ்ணு, S. T. லஷ்மன். 619

## இமையாணன் வெற்றி

யாழ்ப்பாணம், செவ். வல்வெட்டித்துறைறெயின்போஸ் கழகத்தினருக்கும், இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே புத்தாண்டன்று நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகத்தினர் 2—1 என்ணிக்கையால் வெற்றியீட்டிடினர். மத்தியஸ்தராக திரு. மகோற்கடமூர்த்தி கடமையாற்றினர்.

## நீல இல்லம் வெற்றி

சங்கானை, திங்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி இல்லங்களுக்கிடையேயான இறுதிக் கரபந்தாட்டப் போட்டியில் நீல இல்லம் வெற்றிபெற்றது. கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஆர். கருணாநிதி மத்தியஸ்தம் வகித்தார்.

## 35 ஓட்டங்களால் வென்றது

அளவெட்டி, திங்கள் குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று காங்கேசன்துறை குருவிளையாட்டுக் கழகமும், தெல்லிப்பளை புளுடயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டதில் குரு விளையாட்டுக் கழகம் 35 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

குரு விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரத்தினசிங்கம், கணேசுநாதன் ஆகியோரும் தெல்லிப்பளைக் கோஷ்டியைச் சேர்ந்த சிவபாலன், திருச்சிற்றம்பலம் ஆகியோரும் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

இப்போட்டி காங்கேசன்துறை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## இரு போட்டிகளிலும் வெற்றி

அளவெட்டி, திங்கள் காங்கேசன்துறைப்பொலிசாரும், வலி-வடக்கு விளையாட்டுக் கழக சமாச (காங்கேசன்துறைப் பகுதி) மும், கிராம சேவையாளர்களும் ஒன்று சேர்ந்து நடாத்திய புத்தாண்டு விளையாட்டு விழாவில் காங்கேசன்துறை கைப்பந்தாட்டத் தெரிவுக் குழுவுக்கும், அச்சுவேலி கைப்பந்தாட்டத் தெரிவுக் குழுவுக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் இரு ஆட்டங்களிலும் காங்கேசன்துறைக் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி காங்கேசன்துறை பட்டினசபைமைதானத்தில் நடைபெற்றது.

**RAJAH**
JAFFNA
Daily at
4-45 7-00 & 9-45 p.m.
Brad Haris
as Secret Agent 007
in
Criminals of Hong Kong

## 'ஆத்மீகத்துறை மூலம் மனித குலம் சுபீட்சமடையலாம்'

உடுப்பிட்டி, திங்கள் "இப்பூமியிலே பல்வேறு ஆன்மாக்கள் வெவ்வேறு வடிவில் தோன்றிப் பிறவியின் பயனை அனுபவித்து வருகின்றன. இன்பம் துன்பம் என்னும் பெரும் பிணியில் சிக்கித் தவிக்கும் மனித குலம் ஆத்மீகத்தின்மூலமே சுபீட்சமடைய முடியும். இன்று நாடுகளிலே நிலவி வரும் சகல நெருக்கடிகளையும் இறை வழிபாட்டின் மூலம் போக்கமுடியும். தெய்வ நம்பிக்கையின்மையும் போட்டிமனப்பான்மையுமே தலைவர்களின் அழிவுக்கு காரணமாக இருக்கின்றது.

தமிழினம் புனித தினங்களின் மூலம் தமது வாழ்வில் இன்பமடைகின்றனர். புத்தாண்டுகள் தோன்றுவதும் மறைவதும் யுகத்தில் நிகழ்வனவேயாகும். ஆனால் எமதுள்ளத்தில் எக்காலமும் களங்கமேற்படாமல் பார்த்துக்கொள்வதே புத்தாண்டின் குறிக்கோளாகும். ஒவ்வொரு புத்தாண்டும் இதனையே எமக்கு நினைவூட்டுகின்றன."

இவ்வாறு உடுப்பிட்டித் தமிழ்மன்றத்தின் புத்தாண்டுதினவிழா மன்ற மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி அரசினர் ஆஸ்பத்திரி டாக்டர் திரு. சி. வேல்முருகு பேசுகையில் கூறினார். இக்கூட்டம் டாக்டர் திரு. ஆ. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் ஜே. விஜயக்குமார், சி. சத்தியேஸ்வரன், க. இராசையா ஆகியோரும் பேசினர்.

## தஞ்சமளித்த பெண்ணின் தாலிக்கொடியை திருடினர்களாம்

வவுனியா, திங்கள் சுகவீனமென்றும் தங்க இடந்தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்ட மூவருக்குத் தஞ்சமளித்த பெண்ணின் கழுத்தைத் திருகி, கழுத்தில் கிடந்த தாலிக்கொடியையும் மற்றும் பணத்தையும் நடுச்சாமத்தில் அபகரித்துச் சென்றனராம். இதசம்பந்தமாக நடவடிக்கையில் ஈடுபட்ட வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹெரத்தும் சார்ஜன்ட் மிஸ்கினும் சந்தேகநபர்கள் மூவரையும் கைது செய்து பொருட்களையும் மீட்டனர்.

இதுசம்பந்தமாக சின்னப்புக்குளத்திலுள்ள கந்தையா பாக்கியம் என்னும் பெண் வவுனியா பொலிஸில் செய்துள்ள புகார் வருமாறு:

"இரவு சுமார் ஏழு மணிக்கு மூவர் எனது வீட்டுக்கு வந்தனர். ஒருவருக்கு கடும் சுகவீனமென்றும், எனவே அன்றிரவு எனது வீட்டில் தங்குவதற்கு இடம்தரவேண்டுமென்றும் கேட்டனர். அவர்களை வீட்டில் படுக்க வைத்து குடிநீரும் அவித்துக்கொடுத்தேன் நள்ளிரவில் எனது படுக்கையறையில் வந்து மூவரும் எனது வாயைப் பொத்திக் கழுத்தைத் திருகித் தாலிக்கொடியையும் மற்றும் பணத்தையும் திருடிக்கொண்டு ஓடினர்."

## ஆண்டுவிழா

கொழும்பு, திங்கள் கொழும்பு இந்துவாலிபர் சங்க அப்பர் அருள் நெறிக் குழுவினரின்பஜனை ஆண்டு விழாஇம்மாதம் 13-ந்திகதி நடைபெற்றது. கொழும்பு செட்டியார் தெரு முத்து விநாயகசுவாமிரதோற்சவத்தின் போது நடைபெற்ற இவ்வைபவத்தில் கொழும்பு ஸ்ரீராமகானசபை, கொழும்பு திவ்ய ஜீவனசங்க ஸ்ரீ சிவானந்தசங்கீர்த்தனக்குழு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவில் ஸ்ரீ சண்முகானந்தகான சபை, வடகொழும்பு இந்துபரிபாலன சங்க பஜனைக் குழு, தட்டாரத்தெரு சிவசுப்பிரமணிய கோவில் ஸ்ரீ சண்முகானந்தகான சபை, யாழ்ப்பாணத்தார் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமிகோவில் ஸ்ரீ ஆறுமுகநாவலர் கான சபை, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச்சங்க பஜனைக் குழு, கொழும்பு இந்துவாலிபர் சங்க அப்பர் அருள் நெறிக்குழு ஆகியன கலந்து கொண்டனர்.

உதைபந்தாட்டம்

## ஸ்டார் வெற்றி

உடுவில் திங்கள் புதுவருடதினத்தை ஒட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்ட மொன்றில் உடுவில் ஸ்டார் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுள்ளது.


உடுவிலில் நேற்றுமாலை நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியில் உடுவில் ஸ்டார் விளையாட்டுக்கழகமும் சுதுமலைவள்ளுவர் விளையாட்டுக்கழகமும் கலந்து கொண்டன. 5; 2 கோல்களால்முடிவில் உடுவில்ஸ்டார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

திரு. எம். பவானந்தராசா இப்பேட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Petter Cushing
Christopher Lee
in
THE SKULL

**REGAL** JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P.M.
Bette Davis
Olivia de Havilland
in
Hush Hush
Sweet Charlotte
[Adults]

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை]
விஜிதா [மஸ்கேலியா]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

## வரி விளம்பரம்

### காணவில்லை

கார்ச்சாவி:
A 40 கார்ச் சாவியொன்று வருடப்பிறப்பன்று நல்லூரில் காணமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் திருச்செல்வத்திடம்கொடுக்கவும். 1428

கைக்கடிகாரம்:
14-4-68-ம் திகதி, மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்குப்போகும் வழியில் கைக்கடிகாரம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுப்பவர் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி. சிதம்பரநாதன், வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. 1431

### குத்தகைக்கு

நெற்காணி:
புளியம்பொக்கணையில் 10 ஏக்கர் நெற்காணி செய்கைக்குத்தகைக்கு விடப்படும். திறமான நிலம், நியாயமான குத்தகை முறைகள் விண்ணப்பிக்கவும். 25 மூகாந்திரம் ஒழுங்கை, தெஹிவலை, 1430

## மோட்டார் காரும் இருவரும் கைது

யாழ்ப்பாணம், செவ். சுமார் 3000 ரூபா பெறுமதியான கள்ளக்கடத்தல் பொருட்களுடன் வந்ததாகக்கருதப்படும் காரொன்றைப் பொலிஸார் கைப்பற்றினர் இச்சம்பவம் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

பழைய காட் சாரங்கள், இந்திய உயர்ரகச் சேலைகள் ஆகியனவற்றுடன் இந்தக் கார்வந்ததாம்இதுபொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களான தியாகலிங்கம், சபாரதம், ஆகிய இருவரும் கைப்பற்றப்பட்ட பொருட்களும் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

[கா. நி.]

## புதிய நியமனம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண மாவட்ட உதவிதேர்தல் அதிகாரியாக திரு. கந்தசாமி இன்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அனுரதபுரத்தில் மாவட்ட காணி அதிகாரியாகக் கடமையாற்றியவராவர். [கா. நி.]

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

## பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. வீல்ட்மாஷல் மொஹமட் அயூப் கான்.
2. ஆங்கிலேயர்.
3. திருகோணமலை.
4. இல்லை.
5. திரு. எம். சிவநாதன்.
6. திரு. எல். பி. ருஜகருணு [L. B. RaJakaruna].
7. திரு. எச். டபிள்யூ அமரசூரியா.
8. கிரிக்கெட்.
9. கட்டுநாயக்கா.
10. சேமுவெல் கொல்ட் [Samuel Colt].
11. கபிலவஸ்து.
12. ரவிந்திரநாத் தாகூர்.
13. திரு. கிளேறன்ஸ் ஒ குறே [Clarence O Coorey].
14. டாக்டர் ஆர். எச். டி. சில்வா
15. டாக்டர் வீவிக்ஸ் பொன்னம்பெருமா.

[அடுத்த மாதிரி வினாவிடைகள் 23- 4- 68ல் வெளிவரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆலயப் பிரவேசத்தில் இந்தியா காட்டிய வழி

## இங்கும் கடைப்பிடிப்பது நிலைமையைச் சுலபமாக்கும்"

யாழ்ப்பாணம், செவ்.

"இந்தியாவில் ஆலயப் பிரவேசம் தலைப்பக்கத்தால் ஆரம்பித்தது. ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் மீனாட்சியம்மன் கோயிலை முதன்முதலில் திறந்துவைத்தார். ஸ்ரீ வைத்தியநாதஐயர், ஸ்ரீ. சி. பி. இராமசாமி ஐயர் ஆகியோரும் ஆலயப் பிரவேசத்துக்கு முன்னின்று உழைத்தனர். மூவரும் பிராமணர்களாயிருந்தமையால் அவர்களின் நியாயம் சரியானது என்று கருதி எந்தப் பிராமணர்களும் எதிர்க்க முன்வரவில்லை. 'பெரியவர்கள் ஊருக்கு நல்லதையேசெய்வர்என்றுசாதாரணமாக வரவரும் சொல்லிக்கொண்டனர். இதனால் எவரதும் எதிர்ப்பில்லாமல் சுமுகமாகவே இந்தியாவில் ஆலயப்பிரவேசம் நடைபெற்றது."

இவ்வாறுஅகில இலங்கை மாமன்ற ஆலயப் பிரவேச முயற்சிக்குழுவினரிடம் சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் மைந்தனான ஸ்ரீமுத்துக்குமாரசுவாமிப் பிள்ளை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

வேதாரணியத்தில் ஸ்ரீவேதரத்தினம் என்றபெரியார் தாழ்த்தப்பட்டவர்களை அழைத்து அவர்களை ஆசார சீல அனுஷ்டானர்களாக்கி ஆலயப்பிரவேசத்தை முன்னின்று நடத்தினார். இவரைப்போல அகிலஇலங்கை இந்துமாமன்றத்தின் உண்மைத் தொண்டர்கள் உள்ளத்தூய்மையுடன் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும்சென்று அவர்களை தூய்மை செய்து ஆலயத்துள் அழைத்துச் செல்ல ஆயத்தம் செய்வது விரும்பத்தக்கது.

'எண்ணெய்ச் சட்டியைக் கொதிக்க வைத்துக் கொண்டு எல்லோரும் ஆலயப் பிரவேசம் செய்யலாம்' என்று எவராவது சொல்வாரானால் அவர்கள் உள்ளத் தூய்மை உடையவர்களா? பயமுறுத்தி ஆலயப் பிரவேசம் செய்விப்பதிலும் பிரயோசனமில்லை. அரசாங்கம் தன் அதிகாரத்தால் ஆலயப் பிரவேசத்தைச் செய்வதைவிட சைவசமய பக்தர்களே ஆலயப் பிரவேசத்தை மேற்கொள்வது புனிதமானது.

சிலர் எடுக்கும் கெடுபிடி நடவடிக்கைகளும் தவிர்க்கப்படவேண்டும். பிற சமயத்தவர்கள் பிற நோக்கங்களை மனதில் வைத்து ஆலயப்பிரவேசத்தை நடாத்தி வைக்க எண்ணுவதும் மனக்கஷ்டத்தைக் கொடுக்கும். ஊறிப்போன பழக்கத்தை அன்பு நெறியால் தான் மாற்றம் செய்யவேண்டும்.

சட்டம் ஒன்று இயற்றப்பட்டு ஆலயப்பிரவேசத்துக்கு வழி வகுப்பதாலும் தப்பில்லை எனவும் சட்டமும் ஆகிவிட்டது என்றும் அமைதியான முறையில் யாவும் நடைபெறும் எனவும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அகிலஇலங்கை இந்து மாமன்ற ஆலயப்பிரவேசத் தூதுக்குழு இந்த வாரமும் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான ஆலயங்களின் முகாமைக்காரர்களையும், உபயகாரர்களையும், வழிபடுவோரையும் கண்டு ஆலயப்பிரவேசத்துக்குரிய ஆக்கவேலைகளில் ஈடுபடும்.

அகிலஇலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். ஆலயப்பிரவேச காரியக்குழுவின் அடுத்த கூட்டம் இம்மாதம் 20-ந் திகதி பிற்பகல் 4 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கூடும் என காரியக்குழுச் செயலாளர் திரு. சி. பொன்னையா தெரிவிக்கிறார்.

## கிங்குக்கு அஞ்சலி

உடுவில், செவ்.

மறைந்த நீக்ரோத் தலைவர் டாக்டர் லூதர் கிங்கின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கோகுவில் சனசமூகநிலையத்தினர் ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். அன்னாருக்கு அனுதாபம் தெரிவிக்கும்முறையில் இரு நிமிஷ மௌனம் கூட்டத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

கந்தரோடை சனசமூக நிலையமும் ஒரு அனுதாபம் தெரிவித்து அமெரிக்க ஸ்தானிகராலயம் ஊடாக அன்னாரின் குடும்பத்துக்கு ஓர் அனுதாபச் செய்தியை அனுப்பிவைத்துள்ளது.

## தந்திக்கம்பி களவு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணப் பகுதியில் தந்திக் கம்பித் திருட்டு மீண்டும் அதிகரிக்கத்தொடங்கியுள்ளது. கடந்த ஓர் இரவில் மட்டும் இங்குசுமார் 600 ரூபா பெறுமதியான தந்திக் கம்பிகள் களவு போயுள்ளதாகப் பொலிசாருக்குத் தெரிய வந்துள்ளது.

வட்டுக்கோட்டை புன்னாலை வீதியில் 125 ருத்தல் தந்திக் கம்பியும், அரியாலையில் 100 ருத்தல் நிறையுள்ள தந்திக் கம்பிரிமே களவுபோனதாகும். சந்தேக நபர்கள் எவரும் இன்னும் கைதாகவில்லை. (கா. நி)

## மூன்றுகால்குஞ்சு

யாழ்ப்பாணம், செவ்.

மூன்றுகால்களைக் கொண்ட அதிசயகோழிக்குஞ்சு ஒன்று வண்ணார்பண்ணை மேற்குபத்திரகாளி கோவில் வீதியில் திரு. வி. இராசபாக்கியம் என்பவருடைய வீட்டில்தற்போது உயிருடன் இருந்து வருகின்றது. புதுவருடதினத்தன்று இவ் வீட்டில் இவ்வதிசயக் குஞ்சு பிறந்ததாம். [கு. நி.]

## சைக்கிள் லொறி விபத்து ஸ்தலத்தில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், செவ்

ஒரு சைக்கிளின் மீது லொறியொன்று மோதியதால் சைக்கிளில் சென்றவர்களில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவனியா 120-ம் கட்டைக்குஅருகாமையில் நடைபெற்ற இவ்விபத்தில் தனபாலசிங்கம் என்பவர் உயிரிழந்தார். மற்றவரான குமாரசாமி காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லொறிச் சாரதியான சமரசிங்கா பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். (கா. நி)

## புதுவருடச் சண்டையில் ஒருவர் பலி; மற்றவர் காயம்

யாழ்ப்பாணம், செவ்.

இருவருக்கிடையில் நடைபெற்ற கைகலப்பொன்றில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார். மற்றொருவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவனியாவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் பாவற்குளத்தைச் சேர்ந்த எஸ். கே. சண்முகம்' என்பவரே ஸ்தலத்தில் மரணமானவர். இவரைக் கத்தியால் குத்தி கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் இராஜரத்தினம் என்பவரும் பொலிஸ் பாதுகாப்புடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதுவருடப் பிறப்பன்று நடைபெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து பொலிசார் புலன்விசாரணை நடாத்தி வருகின்றனர். [கா. நி]

## மிதக்கும்...

1-ம் பக்கத்தொடர்ச்சி

மூலம் இரு நாடுகளுக்குமிடையில் நட்புறவை வளர்க்குமென்றும் பிரதமர் குறிப்பிட்டார். கப்பலின் டைரக்டர் வில்லியம் டோஷ்பேக கையில், கப்பலில் வந்துள்ள டாக்டர்களும் மற்றவர்களும் இங்கு சிகிச்சையளிக்க மட்டுமல்ல இங்குள்ளவர்களிடம் கற்கவுமே வந்துள்ளார்கள் என்றார்.

இக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் சிகிச்சைகள் அளித்தபோதிலும் அதில் வந்துள்ள டாக்டர்கள் கண்டி மற்றும் சில இடங்களிலும் சிகிச்சையளிப்பர் என்று தெரிகின்றது. கப்பல் இங்கிருந்துசென்ற பிறகும் அக்கப்பலில் வந்துள்ள டாக்டர்கள் குழு ஒன்று இலங்கையில் மேலும் சிலகாலம் தங்கியிருக்கும்.

கப்பலில் வந்த மாதிமார்கள் இலங்கை தேசிய கீதத்தை மிகத் தெளிவாகவும் அளகாகவும் பாடினார்கள். பிரதமமந்திரி அவர்களை அதற்காக வெகுவாகப் பாராட்டினார்.

நுவரெலியாவில்

## பிரதமரும் சிறிமாவும்

கொழும்பு, திங்கள்

பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் இப்போது நுவரெலியாவில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

நுவரெலியாவிலுள்ள பிரதமரின் விடுமுறைக் கால பங்களாவில் பிரதமரும்

[2-ம் பக்கம் பார்க்க]

## 'தமிழினத்தை அழிக்க இருசக்திகள்முயற்சிக்கின்றன"

வல்வெட்டித்துறை, ஞாயிறு

தமிழ்மக்கள் மத்தியில் இன்றுவரை தீர்க்கப்படாமல் பல பிரச்னைகள் இருந்து வருவதால் வருங்காலத்தில் தமிழ் மக்கள் அவற்றில் விழிப்பாக இருக்க வேண்டும். தென்னிலங்கையில் தமிழினத்தை அழிக்கக் கூடிய இரண்டு பெரும் சக்திகள் உருவாகி வருகின்றன. அவை நம்மைத்தாக்காதவாறு பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மக்களின் அன்பைப்பெற்ற அன்றே மக்களின் பொறுப்பும் என் தலையில் உள்ளது'

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி.யும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சிவசிதம்பரம் உபசபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டதை யொட்டி அவரை கௌரவிக்கும் முகமாக தொண்டமானாறு மறுமலர்ச்சி மன்றத்தாரால் செல்வச்சந்நிதி வாசிகசாலை முன்றலில் நடாத்தப்பெற்ற இக்கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு. எஸ். பொன்னுத்துரை தலைமைவகித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நான் பதவியைப் பெரிதாக மதிப்பதில்லை. மக்களின் அன்பைத் தான் பெரிதாக நினைப்பவன். கண்ணியம், நேர்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்து நமது பிரச்னைகளை சிங்கள மக்களுக்கு ஆணித்தரமாக எடுத்துரைத்தால் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். வடமராட்சி மக்களைக் கள்ளக் கடத்தல்காரர் எனச் சொல்லிப் பொலிசார் காவல் முகாம்களை அமைத்துள்ளனர். கள்ளக் கடத்தல் செய்வதற்கு பொலிசார் தான் உடந்தையாக இருந்து வருகிறார்கள். அவர்கள் கைலஞ்சம் வாங்குவதை எப்போ நிறுத்துகிறார்களோ அன்றே கள்ளக் கடத்தல் ஒழிந்துவிடும். வடமராட்சி மக்களை இம்சிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் பொலிசார் இம்முகாம்களை அமைத்துள்ளனர். இதனை இப் பகுதி மக்கள் எதிர்க்க வேணடும்.

பருத்தித்துறைப் பட்டன சபைத் தலைவர் திரு. என். நடராசா, பருத்தித்துறை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. வி. பி. சுந்தரலிங்கம், திருவாளர்கள் கே. மோதிலால் நேரு, எஸ். ஜெயகநாதன், துரைராசா, கந்தையா, எஸ். நடராஜா ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள்.

## கைதி தற்கொலை

கொழும்பு, திங்கள்

இன்னும் இரண்டு மாதங்களில் தூக்கில் இடப்படவிருந்த கைதியொருவர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தற்கொலை புரிந்து கொண்டுள்ளார்.

26 வயதான ஆராச்சிகே சோமதாஸா என்ற இக்கைதி புதுவருடதினத்தன்று தமது உறவினர்கள் வருவார்களென்று ஆசையோடுகாத்திருந்ததாகவும் ஆனால் எவரும் வராமல் ஏமாற்றமுற்றதாகவும் மரணவிசாரணையில் இன்னொருகைதி கூறினார். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், செவ்.

இன்று மாலை 6-30 மணிக்கு புலோலி மேற்கு சனசமூக நிலையத்தில் கதிரவேலுப்பிள்ளை நினைவுவிழா தலைவர் திரு. மு. பொ. வீரவாகு தலைமையில் நடைபெறும்.

## அண்ணா .........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிரஸ் ஆட்சியில் தமிழ்நாடு உட்பட இந்திய ராஜ்யங்கள் பலவற்றிலும் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி பற்றித் தாம் மறைக்கப் போவதில்லை என்று திரு. சி. என். அண்ணாதுரை தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பேசுகையில் கூறினார்.

தாம் விஜயம் செய்யவிருக்கும் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியைத் தாம் விபரமாக அறிந்துகொள்ள எண்ணியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வரவேற்புபசாரத்தை ராஜ்ய மந்திரிகள் அளித்திருந்தனர். இதில் தமிழக மேல் சட்டசபைச் சபாநாயகர் திரு. எஸ். டி. ஆதித்தன், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி., சென்னை மேயர் திரு. இஸ்மெயில் ஆகியோரும் கலந்து பேசினர். தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். கல்வி மந்திரி திரு. நெடுஞ்செழியன் வரவேற்புரை வாசித்தார். பொதுத்துறை மந்திரி திரு. மு. கருணாநிதி நன்றியுரை கூறினார்.

வடபகுதி அசைஸ்விசாரணை

## பருத்தித்துறை கைக்குண்டு வீச்சு வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ்வாய்

பருத்தித்துறை கைக்குண்டு வீச்சு வழக்கு நேற்றுக்காலை விசாரணை செய்யப்பட்டபோது டாக்டர் ஆர். சோமசுந்தரம் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 67-ம் ஆண்டு ஏப்ரல் 25-ந் திகதி பருத்தித்துறையில் செல்வராசா ஜெயராசா, செல்வராசா இரத்தினசாமி ஆகிய இருவரும் செல்லத்துரை பாலசுப்பிரமணியம் என்பவருக்கு கைக்குண்டு வீசி கடும் காயம் விளைவித்ததாகவும் அதே இடத்தில் அதே சமயத்தில் வேதலிங்கம் வைத்திலிங்கம், சிவலிங்கம் தேசராசா ஆகியோருக்கும் கடும் காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் ஜே. பி. செரிபிம் புறக்டா வேலும்மயிலின் அனுசரணையுடன் ஆஜரானார்.

2-ம் எதிரி சார்பில் அட்வகேட் எம். சிவசிதம்பரம் புரக்டர் எல். நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் வி. யோகராசா நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரியதரப்பில் சுனில் டி சில்வா ஆஜரானார்;

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org